# Covid-19 பின் பொருளாதார நெருக்கடியால் நெற்செய்கையாளர்கள் எதிர்கொண்ட மனச்சோர்வும் அதனுடன் தொடர்புடைய காரணிகளும் : வவுனியா வடக்கு நெடுங்கேணி பிரதேச செயலகத்தை அடிப்படையாக கொண்ட ஆய்வு

**கிருபாகரன், ச., அபிராமி, இ.**
மெய்யியல்துறை (உளவியல்), யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
skirupakaransky@gmail.com

*உலகளாவிய ரீதியில் நெல் உற்பத்தியானது இன்றியமையாத ஒரு பொருளாதார நடவடிக்கையாக திகழ்கின்றது. நெல் இன்று ஆசியாவின் பிரதான உணவாக மாறியுள்ளது. ஆனால், விவசாய நாடான இலங்கை தற்காலங்களில் ஏனைய நாடுகளில் இருந்து அரிசியின் இறக்குமதியை எதிர்பார்க்கும் துர்பாக்கிய நிலை காணப்படுகின்றது. அந்த வகையில் ஆய்வு பிரதேசமான வவுனியா வடக்கு நெடுங்கேணி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட நெடுங்கேணி பிரதேசமானது ஒரு விவசாய பிரதேசமாகும். இப்பிரதேசத்தின் நெற்செய்கை யானது பல பௌதீக, சமூக, பொருளாதார காரணிகளின் ஒருங்கிணைந்த செயற்பாட்டி னாலேயே தீர்மானிக்கப்படுகிறது. அந்தவகையில் இவ்வாய்வானது, கோவிட்-19 பின் பொருளாதார நெருக்கடியால் நெற்செய்கையாளர்கள் எதிர்கொண்ட மனச்சோர்வும் அதனுடன் தொடர்புடைய காரணிகளை அடையாளம் காணுவதை நோக்கமாக கொண்டுள்ளது. ஆய்வானது வவுனியா வடக்கு நெடுங்கேணி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட 20 கிராமசேவையாளர் பிரிவுகளையும் அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் 18வயதிற்கு மேற்பட்டவர்கள் எளியஎழுமாற்று மாதிரி எடுப்பின் அடிப்படையில் 100 மாதிரிகள் தெரிவு செய்யப்பட்டனர். விவசாயிகளிடமிருந்து தரவுகள், வினாக்கொத்து மற்றும் (PHQ-9) அளவுகோல் மூலமாகவும் பெற்றுக்கொள்ளப்பட்டன. பெறப்பட்ட தரவுகள் சமூக விஞ்ஞானத்திற்கான புள்ளி விபரப் பகுப்பாய்வு (SPSS) மென்பொருளின் ஊடாக விபரண பகுப்பாய்வு மற்றும் பிற்செலவுப் பரிசீலனை, இணைவுப்பரிசீலனை ஆகிய நுட்பங்களை பயன்படுத்தி அளவுசார் மற்றும் பண்புசார் அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்பட்டன. பிற்செலவுப் பரிசீலனை அடிப் படையில் நோக்குகின்ற போது உரவிலையேற்றமானது -43.9% இணைவு நிலையையும் -18.4%மான தாக்கத்தினையும் பொருண்மை பெறுமானம் 0.000 ஆனது பொருண்மை மட்டம் 0.05 விட குறைவாகவும் உரத்தின் விலையேற்றம் ஒரு அலகினால் மாற்றமடையும் போது நெற்செய்கையாளர்களின் மனச்சோர்வு 0.516 இனால் மாற்றமடையும் என்கின்ற முடிவையும், கிருமிநாசினி 22% இணைவுநிலையும் -3.9% தாக்கத்தினையும் பொருண்மை மட்டம் 0.05 விட பொருண்மை பெறுமானம் 0.28 ஆக உள்ளதால் தாக்கம் செலுத்துவ தாகவும் விலையேற்றம் ஒரு அழகினால் மாற்றமடையும் போது மனச்சோர்வானது 0.27 மாற்றமடையும் என்கின்ற முடிவையும், எரிபொருளானது 0.05 விட 0.343 ஆக காணப்படுவதால் பிற காரணிகளின் செல்வாக்கால் குறைந்த தாக்கத்தையும் இணைவையும் குடும்ப வருமானப் பொருண்மை மட்டம் 0.05 விட அதிகமாக 0.128 உள்ளதால் பிற காரணிகளின் செல்வாக்கினால் குறைந்த தாக்கத்தையும் இணைவையும் கடனானது 28.9% இணைவையும் 7.4% தாக்கத்தினையும் பொருண்மை மட்டம் 0.05 விட குறைவாக 0.04 ஆக*